


## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# எப்படி உருவானேன்!

## (ஆடை)

ஆடை என்பது நாம் உடலை மறைக்கவும், பாதுகாக்கவும், அழகுபடுத்தவும் அணியும் ஒரு உடையாகும். இது நம் கலாச்சாரம், வாழும் இடம், காலநிலை, மற்றும் தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப வேறுபடும். இந்த ஆடையைப் பருத்தி செடியில் இருந்து எப்படி உருவாக்குகிறார்கள் என்று பார்க்கலாம் வாருங்கள்.





முதலில், விவசாய நிலத்தைத் தேர்வு செய்து பருத்தி விதைகளை விதைக்க வேண்டும். செடிகள் வளர்ந்து பூக்கும் வரை சூரிய ஒளி மற்றும் நீர்ப் பாசனம், பூச்சி மருந்து அடித்தல் போன்றவை தேவைப்படுகின்றது.









சுமார் 5-6 மாதங்களில், பருத்திச் செடிகளில் பஞ்சுக் காய்கள் உருவாகும். இந்தக் காய்கள் வெடித்து, உள்ளே இருந்து வெள்ளை நிறப் பஞ்சு வெளிவரும். பஞ்சை கைகளாலோ அல்லது இயந்திரங்களாலோ சேகரிக்கின்றனர்.







ஜின்னிங் (Ginning):

சேகரித்தப் பஞ்சில் விதைகளும், தேவையற்ற தூசுகளும் இருக்கும். பஞ்சை ஒரு சிறப்பு ஆலைக்குக் (Ginning Mill) கொண்டு சென்று, விதைகளைப் பஞ்சில் இருந்து தனியாகப் பிரிப்பார்கள். இந்தச் செயல் முறைக்கு "ஜின்னிங்" என்று பெயர். அதன் பின்பு நமக்கு சுத்தமான பருத்தி இழை (Lint) கிடைக்கின்றது.





## நூல் நூற்றல் (Spinning):

பருத்தி இழைகளைச் சுத்தப்படுத்தி, நீட்டி, திருகி மெல்லிய நூலாக மாற்றுகின்றனர். இந்தச் செயல் முறைக்கு "நூல் நூற்றல்" என்று பெயர். இந்த நூல்தான் ஆடைகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.



## துணி நெய்தல் (Weaving):

நெய்தல் என்பது நூல்களை ஒன்றுக்கொன்று குறுக்காக பின்னி நெசவாளர்கள் கைத்தறி அல்லது இயந்திரத்தறி மூலம் துணிகளை (fabric) உருவாக்குகின்றனர். இதன் மூலம் சட்டைகள், சேலைகள், பாவாடைகள் போன்ற பல வகையான ஆடைகளை உருவாக்குகின்றனர்.





பின்னல் (Knitting):

பின்னல் என்பது ஒரே நூலைக் கொண்டு வளையங்களாகப் பின்னி துணிகளை உருவாக்குதல். இதுவும் துணிகளை உருவாக்கும் ஒரு செயல்முறை ஆகும். இதன் மூலம் ஸ்வெட்டர்கள், ஸ்கார்ஃப்கள், கம்பளி ஆடைகள், கையுறைகள், போன்ற பல வகையான ஆடைகளை உருவாக்குகின்றனர்.





சாயம் பூசுதல் (Dyeing)

நெய்யப்பட்ட துணிகளுக்கு வண்ணம் பூசுகின்றனர்.



அச்சிடுதல் (Printing):

துணிகளில் அழகான வடிவங்களை அச்சிடுகின்றனர்.



## ஆடை தைத்தல் (Stitching):

வடிவமைக்கப்பட்ட ஆடைகளை வெட்டி தையல் இயந்திரங்கள் மூலம் தைக்கின்றனர்.






தைத்த ஆடைகளைச் சுத்தம் செய்து, சரிபார்த்த பின்பு விற்பனைக்குத் தயாராக்குகின்றனர்.





உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com